සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

**43 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** எபிரேய திருமறை நூல் பலஸ்தீன யூதர்களிடையே பயன்படுத்தப்பட்டிருப்பினும், அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் தீர்மானிக்கப்பட்டது
(1) கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஹிப்போ பொதுக்கூட்டத்திலாகும்.
(2) கி.மு. 397 இல் ஜனேயாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலாகும்.
(3) கி.மு. 150 இல் புளோறன்சில் நடைபெற்ற றாபிக்களின் பொதுக்கூட்டத்திலாகும்.
(4) கி.பி. 90 இல் ஜனேயாவில் நடைபெற்ற றாபிக்களின் பொதுக்கூட்டத்திலாகும்.
(5) கி.பி. 406 இல் மத்திய தரைக்கடலுக்கு அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலாகும்.

**2.** இயேசுவின் தூதுரைப் பணியின் ஒரு கேந்திர நிலையமான கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள நகரங்களாவன
(1) கப்பர்நாகும், பெத்சாய்தா, திபேரியா என்பனவாகும்.
(2) கப்பர்நாகும், தமஸ்கு, பெத்சாய்தா என்பனவாகும்.
(3) கப்பர்நாகும், மொசப்பத்தேமியா, திபேரியா என்பனவாகும்.
(4) தமஸ்கு, பெத்சாய்தா, மொசப்பத்தேமியா என்பனவாகும்.
(5) பெத்சாய்தா, தமஸ்கு, திபேரியா என்பனவாகும்.

**3.** மேற்கத்திய (வெளிவாரியான) சக்திகளுக்கு எதிராகப் போராடி யூத மக்களை ஒன்றிணைத்து, அவர்களை ஓர் இனமாகக் கட்டியெழுப்பும் பொறுப்பு யாருக்கு வழங்கப்பட்டது?
(1) குலமுதுவர்களுக்கு
(2) இறைவாக்கினருக்கு
(3) நீதித் தலைவர்களுக்கு
(4) பரிசேயருக்கும் மறைநூல் அறிஞர்களுக்கும்
(5) திருத்தொண்டர்களுக்கு

**4.** செலவுகளை ஈடு செய்வதற்கு அதிகளவான வரிகளை வசூலித்த அரசன் யார்?
(1) சாவுல்
(2) சாலமோன்
(3) செதெக்கியா
(4) ஜொசியா
(5) யெகோவாக்கிம்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



5. வட அரசின் யாத்திரைத் தலங்களான பெத்தேல், தாண் ஆகிய இடங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் நோக்கம் யாது?
   (1) தேசிய மற்றும் சமய மறுமலர்ச்சியை அறிமுகப்படுத்துதலாகும்.
   (2) வட அரசில் வெறுமையான நகரங்களில் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறைக் கைதிகளைக் குடியமர்த்துதலாகும்.
   (3) முழு பலஸ்தீனாவையும் மீண்டும் ஒரு முறை தாவீதின் ஆட்சிக்கு உட்படுத்துதலாகும்.
   (4) செதெக்கியா அரசன் உட்பட யூத மக்களை பபிலோனியாவிற்குக் கொண்டு செல்லுவதைத் தடை செய்தலாகும்.
   (5) மக்கள் எருசலேம் ஆலயத்திற்குச் செல்வதைத் தடை செய்தலாகும்.

6. மிகப் பழமையான சட்டங்களையும் சமயச் சடங்குகளையும் தன்னகத்தே கொண்டுள்ள மரபு எது?
   (1) யாவே மரபு (2) எலோகிம் மரபு (3) குருக்கள் மரபு
   (4) யூத மரபு (5) எபிரேய மரபு

7. ஒரே கடவுள் கொள்கையின்பால் மக்களை ஈடுபடுத்துவதற்கு இறைவாக்கினர்கள் வலியுறுத்திய உடன்படிக்கை
   (1) நோவாவுடனான உடன்படிக்கை
   (2) ஆபிரகாமுடனான உடன்படிக்கை
   (3) மெசியாவின் உடன்படிக்கை
   (4) சீனாய் உடன்படிக்கை
   (5) கல்வாரி உடன்படிக்கை

8. பின்வரும் பண்புகளைக் கருதுக.
   A - இறைவனின் கட்டளை - "ஒளி தோன்றுக."
   B - இறை படைப்பை நல்லதெனக்காணல் - "அது நல்லதெனக் கண்டார்."
   C - வாழவேண்டிய முறை - "இம்மரத்தில் மட்டும் உண்ணக்கூடாது."
   D - அவனுக்கு ஓர் துணைவியைப் படைத்தார் - "அவள் பெண் எனப்படுவாள்."
   E - மனிதனைப் படைத்தல் - "நாசிகளில் உயிர் மூச்சை ஊதுதல்"
   F - காலத்தைக் கணித்தல் - "மாலையும் காலையும் ஆயிற்று."
   மேற்குறிப்பிட்ட பண்புகளிடையே முதலாவது படைப்புக் கதையுடன் தொடர்புடையவை
   (1) A, B, D ஆகியன மாத்திரம் (2) A, B, E ஆகியன மாத்திரம் (3) A, B, F ஆகியன மாத்திரம்
   (4) A, C, E ஆகியன மாத்திரம் (5) A, C, F ஆகியன மாத்திரம்

9. கணவன் மனைவிக்கிடையிலான உறவானது இறைவன் நோக்கமாகக் கொண்ட
   (1) ஆளுகையாகும். (2) பரிசாகும். (3) முயற்சியாகும்.
   (4) அடையாளமாகும். (5) கூட்டுறவாகும்.

10. இறைவனிடம் திரும்பி வரும் பாவிக்கும் இரக்கம், கருணை காட்டுகிறார் என்பது தெளிவுபடுத்தப்படும் கதை
   (1) நோவா மற்றும் வெள்ளப்பெருக்குப் பற்றிய கதையாகும்.
   (2) காயின் மற்றும் ஆபேல் பற்றிய கதையாகும்.
   (3) பாம்பிற்கும் பெண்ணுக்கும் இடையிலான கதையாகும்.
   (4) இறைவனுக்கும் ஆதிப்பெற்றோருக்கும் இடையிலான கதையாகும்.
   (5) பாபேல் கோபுரம் பற்றிய கதையாகும்.

11. "தாவீது அரசு எனும் மரத்தில் அரச தளிர் ஒன்று புறப்படும்" எனக் குறிப்பிட்ட இறைவாக்கினர் யார்?
   (1) செக்கரியா (2) ஓசேயா (3) ஆமோஸ்
   (4) எசாயா (5) எசேக்கியேல்

12. எசாயா இறைவாக்கினர் எத்தகைய பண்புடைய மக்களிடையே அனுப்பப்பட்டார்?
   (1) அதிக ஆர்வமுடைய, ஆவலுடன் இருந்த மக்களிடையே ஆகும்.
   (2) எவ்வளவு கேட்டும் உணராத, அதிக ஆர்வமற்ற மக்களிடையே ஆகும்.
   (3) கடின உள்ளம் கொண்ட, புரிந்துகொள்ளாத மக்களிடையே ஆகும்.
   (4) கடின உள்ளம் கொண்ட, ஆர்வம் காட்டும் மக்களிடையே ஆகும்.
   (5) புரிந்துகொள்ளாத, இறைவல்லமையால் நிறைந்த மக்களிடையே ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**13.** ஞான இலக்கியம் தோன்றி இருக்கக் கூடியது
(1) சாலமோன் மன்னனிடமிருந்தாகும்.
(2) அரச சபையிலிருந்தாகும்.
(3) சாதாரண குடும்பச் சூழலில் இருந்தாகும்.
(4) சபை உரையாளரிடமிருந்தாகும்.
(5) நீதிமொழிகளிலிருந்தாகும்.

**14.** கடவுளின் அரச முடிசூட்டு விழாவின் பின்னணியில் திருப்பாடல் தோன்றியது எனக் கூறும் விவிலிய வல்லுனர் யார்?
(1) ஹேமன் குண்கல் (2) ஆத்தர் வைசர் (3) ரேமன் பிறவுன்
(4) வில்லியம் பாக்ளே (5) சிக்மன் மொவின்கல்

**15.** திருப்பாடல்களில், இடையூறான சந்தர்ப்பங்களிலும் துன்ப துயரங்களின் போதும் துணை நாடி இறைவனிடம் விண்ணப்பிக்கும் திருப்பாடல்கள்
(1) புலம்பல் பாடல்கள் எனப்படும்.
(2) அரச பாடல்கள் எனப்படும்.
(3) ஞானபாடல்கள் எனப்படும்.
(4) நன்றிப் பாடல்கள் எனப்படும்.
(5) நம்பிக்கையின் பாடல்கள் எனப்படும்.

**16.** ஒரே தேசமாகிய யூதேயா, சமாரியா, இதுமேயாவை ஆட்சிசெய்ய திபேரியஸ் பேரரசனால் நியமிக்கப்பட்ட ஆளுநர் யார்?
(1) ஏரோது அந்திபஸ் (2) பொந்தியுஸ் பிலாத்து (3) செருபாபெல்
(4) ஏரோது அக்ரிபா (5) அந்தியுஸ் ரூபஸ்

**17.** இயேசுவின் காலத்தில் பலஸ்தீனாவின் ஆட்சியதிகாரம் உரித்தானது
(1) பிலிஸ்தியருக்காகும். (2) கிரேக்கருக்காகும். (3) லேவியருக்காகும்.
(4) எஸ்சேனியருக்காகும். (5) உரோமையருக்காகும்.

**18.** இயேசு கிறிஸ்துவே, யூதமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெசியா என்பதை வலியுறுத்தியவர் யார்?
(1) புனித லுக்கா (2) புனித மாற்கு (3) புனித மத்தேயு
(4) புனித யோவான் (5) புனித பர்னபா

**19.** பின்வரும் சிறப்புரிமைகளைக் கருதுக.
A - சட்ட ரீதியான சமத்துவம் கிடைக்கப்பெறல்
B - பகிரங்கமாகச் செபிக்கும் சுதந்திரம்
C - அரசியல் உரிமைகளுக்கு உரிமை கோரல்
D - எருசலேம் பொதுச்சங்கத்தில் கலந்து கொள்ளல்
E - பொருளாதார சலுகைகளைப் பெற்றுக் கொள்ளல்
F - சிறைப்படுவதிலிருந்து விலகியிருத்தல்
மேற்குறிப்பட்டவற்றுள் உரோமக் குடியுரிமைக்கு உரிமை கோருவோருக்கு உரித்தாகும் சிறப்புரிமைகளாவன
(1) A, B, C ஆகியன மாத்திரம் (2) A, B, E ஆகியன மாத்திரம் (3) A, C, E ஆகியன மாத்திரம்
(4) A, C, F ஆகியன மாத்திரம் (5) C, D, E ஆகியன மாத்திரம்

**20.** உரோமையில் சிறைப்பட்டிருந்தபோது புனித பவுல் தன் கைப்பட எழுதிய திருமுகமாக அமைவது
(1) கொலோசையர் முதல் திருமுகம்
(2) எபேசியர் திருமுகம்
(3) கொரிந்தியர் இரண்டாம் திருமுகம்
(4) கலாத்தியர் திருமுகம்
(5) பிலிப்பியர் திருமுகம்

**21.** மலைப் பொழிவின் மூலம் விளக்கப்படுவது
(1) லௌகிக உலகம் ஆற்றல்களால் நிரம்புவது பற்றியாகும்.
(2) கண்ணியமான நல்வாழ்வுக்கான பண்புகளைப் பற்றியாகும்.
(3) பயன் எதிர்பாராது நன்மை செய்வது பற்றியாகும்.
(4) ஏழ்மையான வாழ்கையும் எளிமையான நிலையும் பற்றியாகும்.
(5) பொறுமையோடு தூதுரைப் பணியில் நிலைத்திருத்தல் பற்றியாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**22.** புனித மத்தேயு தமது நற்செய்தியில் இயேசுவின் மூதாதையரைப் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம், அவர் ஆபிரகாமினதும் வேறு யாரினதும் மகன் என முன்வைக்கிறார்?
(1) ஆதாமின் (2) தாவீதின் (3) யாக்கோபுவின்
(4) ஈசாக்கின் (5) யோசேப்பின்

**23.** இயேசுவின் போதனையின்படி உவமை என்பது
(1) உண்மையற்ற சிந்தனையில் உருவான நிகழ்வாகும்.
(2) இயற்கையில் இடம்பெறும் மாற்றங்களுடன் தொடர்புடைய கதையாகும்.
(3) எளிமையான செய்தியை ஆழமான இறை தத்துவத்தில் கற்பித்தலாகும்.
(4) மக்களின் வாழ்கையோடு மிகவும் நெருங்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறிய கதையாகும்.
(5) செவிமடுப்போரின் கவனத்தை ஈர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் கதையாகும்.

**24.** இயேசு புதுமைகளைச் செய்தது, நான்கு வித அடிமைத் தனங்களினால் துன்புற்ற மக்களை விடுவிப்பதற்காகும். அவற்றில் இரண்டு அடிமைத்தனங்களாவன
(1) மரணம் மற்றும் எதிரிகளின் பழிவாங்குதல்
(2) நோய் பிணிகளும் இயற்கைச் சக்திகளும்
(3) தீய ஆவிகளுக்கு அடிமையாவதும் ஆசைகளுக்கு அடிமையாவதும்
(4) நோய்ப்பிணிகளுக்கும் போதை, சூதுகளுக்கும் இலக்காதல்
(5) பலவித துர்ப்பழக்கவழக்கங்களுக்கு அடிமையாவதும் இயற்கைச் சக்திகளும்

**25.** கொரிந்தியர் முதலாம் திருமுகத்தின்படி உடலைச் சுட்டெரிப்பதற்கான ஒப்புதலை விட மேலானதாக அமைவது
(1) தியாகம் ஆகும். (2) அர்ப்பணிப்பு ஆகும்.
(3) அன்பு ஆகும். (4) ஒற்றுமை ஆகும்.
(5) ஒத்துழைப்பு ஆகும்.

**26.** இஸ்ரயேல் அரசர்கள் அதிகாரம், புகழ், செல்வம் ஆகியவற்றின் மீது தமது அரசைக்கட்டி எழுப்பினாலும், இயேசு கிறிஸ்து தமது அரசைக் கட்டியெழுப்பியது
(1) உன்னத குருவாக ஆகும்.
(2) பணியின் அரசராக ஆகும்.
(3) செம்மறி ஆடுகளின் ஆயராக ஆகும்.
(4) துணை நடுநிலையாளராக ஆகும்.
(5) உண்மையான இறைவாக்கினராக ஆகும்.

**27.** புனித யோவானின் நற்செய்திக்கு ஏற்ப தேவ நற்கருணையை ஏற்படுத்தியமை தொடர்பான முன் அடையாளமாக முன்வைக்கப்படும் புதுமை எது?
(1) இறந்த இலாசரை உயிர்ப்பித்தமை
(2) திரளான மீன்களைப் பிடித்தமை
(3) அப்பம் பலுகச் செய்தமை
(4) தண்ணீரை இரசமாக்கியமை
(5) குருடனான பார்த்திமேயுவைக் குணமாக்கியமை

**28.** திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வை அறிக்கைப்படுத்துகையில் புனித லூக்கா, புனித பவுல் ஆகியோர் ஒரு பாரம்பரியத்தையும் புனித மாற்கு, புனித மத்தேயு ஆகியோர் மற்றுமொரு பாரம்பரியத்தையும் பின்பற்றியுள்ளனர். அப்பாரம்பரியங்களாவன
(1) எருசலேம் பாரம்பரியமும் யூதா பாரம்பரியமும் ஆகும்.
(2) எருசலேம் பாரம்பரியமும் யாவே பாரம்பரியமும் ஆகும்.
(3) அந்தியோக்கிய பாரம்பரியமும் குருக்கள் பாரம்பரியமும் ஆகும்.
(4) அந்தியோக்கிய பாரம்பரியமும் எருசலேம் பாரம்பரியமும் ஆகும்.
(5) அந்தியோக்கிய பாரம்பரியமும் இணைச்சட்ட பாரம்பரியமும் ஆகும்.

**29.** திருத்தொண்டர்களில் எப்போதும் திருச்சட்டத்தை எடுத்துக்காட்டிப் பேசியவர்
(1) புனித பிலிப்பு (2) புனித நிக்கானோர் (3) புனித பிரக்கோர்
(4) புனித திமோத்தேயு (5) புனித ஸ்தேவான்

[பக். 5 ஐப் பார்க்க

**30.** கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதல் பேரரசனும் முதன்முறையாகப் பேரரசு முழுவதும் கலாபனை பரவச்செய்த பேரரசனும் முறையே
(1) மக்ஸிமியனும் மாற்குஸ் அவுரேலியனும் ஆவர்.
(2) செப்திமுஸ்சும் தேசியுஸ்சும் ஆவர்.
(3) நீரோவும் தேசியுஸ்சும் ஆவர்.
(4) வலேரியனும் தொமீசியனும் ஆவர்.
(5) நீரோவும் தொமீசியனும் ஆவர்.

**31.** பேரரசன் வலேரியன் காலத்தில் வாழ்வைப் பலியாக்கிய மறை சாட்சிகள்
(1) புனித செபஸ்தியர், புனித அக்கஸ் அம்மாள் ஆவார்.
(2) புனித பிளேவியன், புனித ஆகத்தம்மாள் ஆவார்.
(3) புனித அலெக்சாண்டர், திருத்தந்தை புனித பெலிக்ஸ் ஆவார்.
(4) புனித சிசிலியா அம்மாள், புனித ஜஸ்டின் ஆவார்.
(5) புனித லவுரேஞ்சியார், புனித திருத்தந்தை II ஆம் சிக்டஸ் ஆவார்.

**32.** கி.பி. 431 இல் நடைபெற்ற எபேசு பொதுச் சங்கத்தில் சிரேஷ்ட மறைவல்லுநராகக் கடமையாற்றிய திருத்தந்தை
(1) மேன்மைதங்கிய திருத்தந்தை I ஆம் செலஸ்ரி ஆவார்.
(2) மேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர் ஆவார்.
(3) புனித திருத்தந்தை II ஆம் சிக்ஸ்டஸ் ஆவார்.
(4) புனித திருத்தந்தை X ஆம் பத்திநாதர் ஆவார்
(5) புனித திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர் ஆவார்.

**33.** அலெக்சாந்திரியாவில் குருகுலத்தின் தலைவராக வரலாற்றில் பெயர் குறிப்பிடப்படுபவர் யார்?
(1) புனித சிறில் (2) புனித ஒரிஜன்
(3) புனித ஜஸ்டின் (4) புனித தெர்த்துல்லியன்
(5) புனித அகுஸ்தினார்

**34.** திருச்சபைத் தந்தை தெர்த்துல்லியன் எழுதிய நூல்களில் முக்கிய இடம் வகிக்கும் நூல் எது?
(1) ஹெக்சப்லா (2) பேதகங்களின் விமர்சனம்
(3) பாவசங்கீர்த்தனம் (4) இறைவனின் நகரம்
(5) நீதியான யுத்தம்

**35.** பெலாஜியசின் கொள்கைக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்த திருச்சபைத் தந்தை யார்?
(1) புனித சிறில் (2) புனித பசில் (3) புனித கிரகோரியார்
(4) புனித அகுஸ்தினார் (5) புனித அத்தனாசியார்

**36.** கோத்திரங்களின் ஆக்கிரமிப்பின் யுகம் ஐரோப்பிய வரலாற்றில் எவ்வித யுகம் எனக் குறிப்பிடப்படுகிறது?
(1) வளர்ச்சியுற்ற யுகம் (2) ஆரம்ப யுகம் (3) பொன்னான யுகம்
(4) ஒளிமயமான யுகம் (5) இருண்ட யுகம்

**37.** அனைத்துப் பேராலயங்களுக்கு அருகிலும் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும் படி எல்லா ஆயர்களுக்கும் கட்டளையிட்டவர்
(1) பெரிய சாள்ஸ் அரசன் (2) VIII ஆம் ஹென்றி அரசன் (3) பிராங் அரசன்
(4) I ஆம் ஓட்டோ அரசன் (5) பெரிய ஏரோது அரசன்

**38.** 'சும்மாதியலோஜிகா' என்னும் சிறந்த நூலை எழுதியவர்
(1) புனித அகுஸ்தினார் ஆவார்.
(2) புனித அத்தனாசியார் ஆவார்.
(3) புனித டொமினிக் ஆவார்.
(4) புனித தோமஸ் அக்குவைனாஸ் ஆவார்.
(5) புனித சிலுவை அருளப்பர் ஆவார்.

**39.** சுவிட்சர்லாந்தில் புரட்டஸ்தாந்து வளர்ச்சிக்கு முன்னோடியாக பெருமுயற்சியோடு செயற்பட்டவர்
(1) வில்லியம் பூத் ஆவார். (2) ஜோன் கல்வின் ஆவார். (3) ஹுல்ரிச் சுவிங்ளி ஆவார்.
(4) ஜோன் வெஸ்லி ஆவார். (5) மாட்டின் லூதர் ஆவார்.

PAST PAPERS WIKI

[பக். 6 ஐப் பார்க்க

**40.** மீட்பு விசுவாசத்தினால் கிடைக்கிறது என்றும் அது கிறிஸ்தவ வாழ்வின் பிரதான மறை உண்மை என்றும் எடுத்துக்காட்டியோர்
(1) ஜோன் வெஸ்லி, சாள்ஸ் வெஸ்லி ஆவர்.
(2) ஹூல்ரிச் சுவிங்கிளி, ஜோன் கல்வின் ஆவர்
(3) வில்லியம் பூத், தோமஸ் மூவர் ஆவர்.
(4) ஜோன் வெஸ்லி, ஜோன் கல்வின் ஆவர்.
(5) ஜோன் பிசர், சாள்ஸ் வெஸ்லி ஆவர்.

**41.** பல்வேறு சபைகளினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - துறவற சபைகளை ஒழுங்கமைத்து முன்மாதிரியான குருக்களை உருவாக்குதல்
B - பாடல்களோடு கூடிய வெளியரங்க மறை உரைகளை நிகழ்த்துதல்
C - தமது மறை போதகப் பணியையும் ஆச்சிரம வாழ்வையும் ஒன்றிணைத்து வாழ்க்கை நடாத்துதல்
D - நோயாளரைப் பராமரித்தும் மிகப் கஸ்டப்பட்டு உழைத்தும் கிடைக்கும் வருமானத்தில் வாழுதல்
E - திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் போதனையின்படி குருக்களை உருவாக்கும் பொறுப்பை துறவற சபைகளிடம் ஒப்படைத்தல்
மேற்குறிப்பிட்டவற்றுள் திருச்சபையின் மறுமலர்ச்சியை உருவாக்க வின்சென்சியன் சபை பின்பற்றிய முறைகளாவன
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) A, E ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) C, E ஆகியன மாத்திரம்

**42.** பிரான்சுக்கும் ஐரோப்பாவிற்கும் தேவைப்பட்ட சமய அடித்தளம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க பேரரசன் நெப்போலியன் நல்லுறவு ஒப்பந்தம் ஒன்றை எத்திருத்தந்தையுடன் செய்து கொண்டான்?
(1) மேன்மைதங்கிய திருத்தந்தை VII ஆம் பத்திநாதருடனாகும்.
(2) மேன்மைதங்கிய திருத்தந்தை XXIII ஆம் அருளப்பருடனாகும்.
(3) மேன்மைதங்கிய திருத்தந்தை XI ஆம் பத்திநாதருடனாகும்.
(4) மேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆம் சிங்கராயருடனாகும்.
(5) மேன்மைதங்கிய திருத்தந்தை X ஆம் பத்திநாதருடனாகும்.

**43.** கி.பி. 1605 இல் 'செபமாலை மாதா' எனும் பெயரினாலான ஆலயம் எச்சபையைச் சேர்ந்த குருக்களால் நிர்மாணிக்கப்பட்டது?
(1) இயேசு சபை (2) ஆசிர்வாதப்பர் சபை
(3) அகுஸ்தீனார் சபை (4) பிரான்சிஸ்கன் சபை
(5) டொமினிக்கன் சபை

**44.** முதலாம் இராஜசிங்க மன்னன் கண்டியை ஆக்கிரமித்தபோது போர்த்துக்கேயரிடம் பாதுகாப்பு வேண்டித் திருகோணமலைக்குத் தப்பியோடிய அரச குடும்ப மகன்
(1) கரலியத்த பண்டார ஆவான்.
(2) ஜயவீர பண்டார ஆவான்.
(3) இளவரசர் தர்மபாலன் ஆவான்.
(4) வீரசுந்தரபண்டார ஆவான்.
(5) டொன் யுவான் யமசிங்க ஆவான்.

**45.** இலங்கை காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தபோது காணப்பட்ட விரும்பத்தக்க பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - வியாபாரத் தேவைகளுக்காகப் பாதைகள் அமைக்கப்பட்டமை
B - மேற்கத்திய வைத்திய முறை ஆரம்பிக்கப்பட்டமை
C - திருவிவிலியம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டமை
D - திருமணத்தின் நிலையான தன்மை உறுதிப்படுத்தப்பட்டமை
E - உதவி பெறும் பாடசாலை முறை நடைமுறைப்படுத்தப்பட்டமை
F - மக்னா காட்டா சட்டம் அமுல்படுத்தப்பட்டமை
மேற்குறித்தவற்றுள் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின்போது காணக்கிடைத்த விரும்பத்தக்க பண்புகளாவன
(1) A யும் B யும் மட்டும் (2) A யும் C யும் மட்டும் (3) A யும் E யும் மட்டும்
(4) B யும் C யும் மட்டும் (5) D யும் F உம் மட்டும்

[பக். 7 ஐப் பார்க்க

**46.** கொழும்பு, யாழ்பாணம், கண்டி ஆகிய திருத்தூதரக மறைமாவட்டங்கள் மூன்றையும் மறைமாவட்ட நிலைக்கு உயர்த்தியவர் யார்?
(1) மேன்மைதங்கிய திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர்
(2) மேன்மைதங்கிய திருத்தந்தை XVI ஆம் கிரகோரியார்
(3) மேன்மைதங்கிய திருத்தந்தை IX ஆம் பத்திநாதர்
(4) மேன்மைதங்கிய திருத்தந்தை ஆயர் ஜோன் ஸ்டீவன் செமேரியா
(5) மேன்மைதங்கிய திருத்தந்தை ஆயர் தோமஸ் பெஞ்சமின் கருதினால் குரே

**47.** பிரித்தானிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடாத்தப்பட்ட பகிரங்க கூட்டமொன்றிற்குத் தலைமைதாங்கிய கத்தோலிக்கர்
(1) சேர் ஜேம்ஸ் பீரிஸ்
(2) ஜே.ஏ.எல். குரே
(3) ஈ.டபிள்யூ. பெரேரா
(4) அல்பட் ஏ. விக்கிரமசிங்க
(5) பீ.ஆர். விஜயவர்தன

**48.** பிள்ளைகளை எரிச்சல் மூட்டாமல் எப்போதும் அன்பாகவும் கருணையுடனும் கிறிஸ்தவ பாணியில் வளர்க்க வேண்டும் என பெற்றோருக்கு அறிவுரை கூறும் விதமாக புனித பவுல் எழுதிய திருமுகம்
(1) உரோமையர் திருமுகம்
(2) திமோத்தேயு திருமுகம்
(3) கலாத்தியர் திருமுகம்
(4) எபேசியர் திருமுகம்
(5) பிலிப்பியர் திருமுகம்

**49.** சூழலை அன்பு செய்த இயேசு கிறிஸ்து தமது கற்பித்தலில் அதனைப் பயன்படுத்தியமையின் மூலம் உறுதிப்படுத்தப்படுவது
(1) அதன் அழிவைப் புரிந்துகொண்டமையாகும்.
(2) அதன் பயனற்ற தன்மையைப் புரிந்துகொண்டமையாகும்.
(3) அதன் மாசடைதலைப் புரிந்துகொண்டமையாகும்.
(4) அதன் பெறுமதியைப் புரிந்துகொண்டமையாகும்.
(5) அதன் நிரந்தரமற்ற தன்மையைப் புரிந்துகொண்டமையாகும்.

**50.** கிறிஸ்தவ சபைகளில் காணப்படும் நற்பண்புகளை எடுத்துக்காட்டி கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிணைப்பை ஒரே மனதாய் பிரார்த்திக்கும் வெளியீடாக அமைவது
(1) மேலைத்தேய கத்தோலிக்க சபை தொடர்பான வெளியீடாகும்.
(2) இன்றைய உலகில் திருச்சபை என்னும் வெளியீடாகும்.
(3) சமய சுதந்திரம் பற்றிய வெளியீடாகும்.
(4) அவனியில் அமைதி பற்றிய சுற்றுமடலாகும்.
(5) இனத்தின் ஒளி என்னும் சுற்றுமடலாகும்.

* * *

PAST PAPERS WIKI

Past Papers Wiki



1711

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பகுதி I

1. (i) பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்பன முதன்முதலில் எழுதப்பட்ட மொழிகள் **இரண்டினையும்** எழுதுக. (02 புள்ளிகள்)

   (ii) திருவிவிலியத்தைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இலத்தின் சொல்லையும் அதன் பொருளையும் எழுதுக. (04 புள்ளிகள்)

   (iii) புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள புத்தகங்களின் வகைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) 2 திமோத்தி 3:16 இன் படி இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருமறை நூலின் நோக்கங்களை நீர் செயற்படுத்தும் விதத்தை **நான்கு** விடயங்களூடாக விளக்குக. (08 புள்ளிகள்)

2. (i) இறைவனின் 'சுயவெளிப்படுத்தல்' கூற்றுக்கள் **ஒவ்வொன்றை** பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் எழுதுக. (02 புள்ளிகள்)

   (ii) சமநோக்கு நற்செய்தி தொடர்பாக நிலவும் பல்வேறு கருத்துக்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

   (iii) சமநோக்கு நற்செய்திகளுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (iv) பல்வேறு சமயங்களும் கலாசாரங்களும் நிலவும் இலங்கையில் நற்செய்தியைப் பரப்புவதற்காக நடைமுறைப்படுத்தத்தக்க ஆலோசனைகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஆசீசியில் புனித பிரான்சிசின் பணிகள் காரணமாகப் பாரிய முன்னேற்றமடைந்த **இரண்டு** துறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) பிரான்ஸியப் புரட்சியின் விளைவாக திருச்சபைக்கு ஏற்பட்ட பாதகமான தடைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

   (iii) இரட்சணிய சேனை மூன்று Sகளின் (3S) அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவை **மூன்றினையும்** விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (iv) மேன்மைதங்கிய திருத்தந்தை XII ஆம் பத்திநாதர் ஆற்றிய பணிகளை இன்றைய சமூதாயத்தில் செயற்படுத்தும் விதத்தை **நான்கு** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய கதைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறைவன் படைத்த உலகை விருத்திசெய்வதில் கிறிஸ்தவரொருவர் பங்கேற்கக்கூடிய விதத்தை **ஐந்து** விடயங்களில் விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) குலமுதுவர்களின் காலம் இஸ்ரயேலின் இறை நம்பிக்கையின் ஆரம்பம் என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தத்தக்க **ஐந்து** விடயங்களை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறை நம்பிக்கையை வளர்க்க உமது பங்கில் செய்யக்கூடிய செயல்கள் **ஐந்தினை** உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) திருச்சங்கங்கள் **நான்கினதும்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.

(a) எழுந்த பேதகங்கள்

(b) பேதகத்தை முன்வைத்தோர்

(c) மறை உண்மையை உறுதிசெய்த சபைத் தந்தையர்

(d) சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறை உண்மை (10 புள்ளிகள்)

(ii) தவறான கொள்கைகள் மற்றும் படிப்பினைகள் காரணமாகத் தவறான பாதையில் செல்லும் இளையோர் வாழ்வினை மறைபோதனையின்படி கட்டியெழுப்ப கிறிஸ்தவரான நீர் பங்களிப்பு நல்கக்கூடிய முறைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையில் போர்த்துக்கேய மறைத்தூதுவர்களின் முயற்சிகள் வெற்றிகரமாக அமைய ஏதுவான காரணிகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நவீன மறை அறிவிப்புப் பணியினை நடைமுறைப்படுத்த சமகாலத்தில் மேற்கொள்ளத்தக்க **ஐந்து** செயற்பாடுகளை போர்த்துக்கேய மறைத்தூதுவர்களினதும் புனித யோசப் வாஸ் அடிகளாரினதும் சேவைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) மனிதனின் சமூகவாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனையை **ஐந்து** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பலவகைமையைக் கொண்ட சமுதாயத்தில் வாழும்போது நீர் முகம்கொடுக்கும் பல்வகையான வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்ளும் விதத்தை **ஐந்து** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library